

## கோபால்தாஸ் — தில்ஜித் சி ஷா

### நிர்வாக இயக்குநர்

குஜராத்திலிருந்து திருச்சி வந்த கோபால் தாஸ் சி மேத்தா மற்றும் நந்தலால் பி.ஷா ஜோடி கூட்டாக 1929ல் கோபால் தாஸ் அண்ட் கோ.வை ஆரம்பிக்க இன்று அது தமிழகத்தின் முன்னணி வைர நகைக்கடையில் ஒன்றாக திகழ்கிறது. இன்று தில்ஜித் சி. ஷா தலைமையில் இயங்கும் கோபால்தாஸ் அண்ட் கோ. வைர நகைக்கு மக்களிடையே இருக்கும் வரவேற்பைப் பார்த்து சென்னையில் அடிகால் பதித்தது. 2005ல் சென்னையில் ஷோரூம் துவக்கப்பட்டு, அதன் பொறுப்பை தில்ஜித்தின் மகன் மிஹிர் டி ஷா பெற்றார். மக்களிடம் வாங்கும் திறன் அதிகரிப்பு, மத்திய தர வர்க்கத்தினிடம் வைரத்திற்கு உள்ள வரவேற்பு, அதிகரித்தால் தங்களது பெரும்பான்மையான வாடிக்கையாளர்கள் மத்திய தர வகுப்பை சேர்ந்தவர்கள் என்கிறார் தில்ஜித். தரம், விலையில் சமரசம் கிடையாது என்பதில் கறாராக இருப்பதுதான் வெற்றிக்கு காரணம் என்கிறார் அவர்.

பானுமதி

**சிறப்பு:** அனைத்து வைர நகைகளும் அவர்களது தயாரிப்பு பிரிவிலேயே தயாராவதால் தரத்தை பராமரிக்க முடிகிறது என்கிறார் தில்ஜித்

**எதிர்காலத் திட்டம்:** ஹைதராபாத்திலும் மும்பையிலும் ஷோரூம்கள் துவங்குவது.

**ஏற்றுமதி:** மத்திய கிழக்கு, தூரக் கிழக்கு நாடுகள்.

> "கார்ப்பரேட் கார்ப்பரேட்களின் வருகையால் ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டிருக்கிறது."